**கடான பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

கடான பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்று தெரிவித்திருக்கவில்லை. இந்த அறிக்கையின் அபிப்பிராயத்தை மறுக்கும் அடிப்படை பகுதியில் காட்டப்பட்டுள்ள விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் மறுப்பு அபிப்பிராயம் ஒன்றினை வெளியிடுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளும் கணக்காய்வு அடிப்படையில் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அறிக்கையிடுதல் எனவு பொறுப்பாகும். எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் அபிப்பிராயத்தை மறுக்கும் அடிப்படை பந்தியில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் இந்த நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமம் 2.5 இன் படி வாடகை, வீதவரி ஆகிய வருமானங்கள் அட்டுரு அடிப்படையின் மீது கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், சபையினால் வருமானம் காசு அடிப்படை மீது கணக்கீடு செய்யப்படுகின்றதென கணக்கீட்டு கொள்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நியமத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | நியமம் 3.20(ஆ) பந்திக்கு மற்றும் 1987 இன் 15 இலக்க பிரதேச சபைகள் தொடர்பான பிரதேச சபைகளின் நிதி நிருவாகத்துக்குரிய கணக்கீட்டு அலுவல்கள் தொடர்பான விதிகளில் விதி 265 இற்கு முரணாக 2023 ஆண்டின் போது சபையின் அபிவிருத்தி கடனின் கீழ் செலுத்த வேண்டியிருந்த | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2,455,012 தொகை நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | நியமத்தின் பந்தி 3.78 (இ) இற்கு முரணாக சபைக்கு சொந்தமான ரூபா 160,000,000 தொகைக்கான ஏழு நாள் வைப்புக்களின் பெறுமதி நடைமுறை அல்லாத முதலீடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | நியமத்தின் பின் இணைப்பு 2 இல் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கான விரிவான விளக்கமளித்தல் EG 3.1 பிரகாரம் நடைமுறை வேலை ஏதேனும் மூலதன வேலைகள் காணப்படின் அவற்றை ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் பதிவேட்டில் தனியான வகையொன்றாக காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் மீளாய்வாண்டு ரூபா 4,500,000 தொகை மற்றும் ரூபா 55,803,215 தொகைக்கான நடைபெறு வேலை பெறுமதி காணி மற்றும் கட்டிடங்கள் என மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 30 திகதி கிடைத்திருந்த ரூபா 459,374 தொகை கடன் பட்டோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன் என. 2023 நாட்குறிப்பின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்குகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு கிடைக்க வேண்டிய மானியம் ரூபா 32,498,936 தொகை பெற வேண்டிய மூலதனம் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், குறிப்பு 10 இல் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபையினால் மதகுகள் மற்றும் வடிகால்கள் திருத்த வேலைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,405,093 தொகை மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | நிதியாண்டு இறுதியில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபையின் நிலையான வைப்புக்களுக்கான மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 28,076,102 தொகை எனினும், ரூபா 27,340,592 தொகை என ரூபா 735,510 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக கணக்குகள் கணக்கீடு செய்யப்படும். | - மேற்படி - |
| (உ) | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்த 13 செயற்திட்டங்கள் தொடர்பான கடன்கொடுத்தோர் மிகை ஏற்பாடுகள் ரூபா 886,812 தொகை கடன் கொடுத்தோர் மீதியில் உட்படுத்தப்பட்டிருந்தது. | 354 ஆம் இலக்க குழுத் தீர்மானத்தின் படி பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | - மேற்படி - |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் படி 10 கணக்கு மீதிகளில் ரூபா 105,169,789 தொகைக்கான இணங்கப்படாத வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அடுத்த வருடம் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 34,434,002 தொகைக்கான 04 கணக்கு மீதிகள் பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் நாட்குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனைகள் மேற்கொள்ள முடியாதிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நி.பி. 371 | 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற 07 சந்தர்ப்பங்கள் தொடர்பான ரூபா 119,957 இற்கான முற்பண மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட பதிவேடுகளை பெற்றுக் கொள்வதில் சிக்கல் தன்மை காணப்படுகின்றன என. | மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | நி.பி. 571 | ரூபா 3,242,046 தொகைக்கான 02 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்திருக்கவில்லை. | கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டு 02 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்கள் வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதென. | குறிப்பிட்ட பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 24 திகதிய LGD/09/2019(I) சுற்றறிக்கை | சபையினால் உள்ளூராட்சி உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கின் கணக்கு எல்லைகளை அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதி மற்றும் நிருவாகக் குழுவிற்கு அனுப்பப்பட்டு பரிந்துரை பெற்றுக்கொண்டு தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | குறிப்பிட்ட பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | 2021 பெப்ரவரி 12 திகதிய LGD/10A/4/ப.க 2019 இலக்கம் கொண்ட மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | நிதியல்லாத சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து 14 வகைப் படுத்தல்களின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என காட்டப்பட்டிருந்த போதிலும், சபையினால் பாதைகள் மற்றும் மதகுகள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கியிருக்கவில்லை. | குறிப்பிட்ட பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 102,456,438 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 167,365,734 தொகையாக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| வீதவரி மற்றும் வரி | 39,191 | 55,863 | 52,960 | 34,351 | 38,557 | 33,153 | 25,449 | 33,448 |
| வாடகை | 4,084 | 1,143 | 1,138 | 179 | 2,288 | 778 | 725 | 174 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,703 | 1,689 | 1,689 | - | 2,703 | 1,163 | 1,163 | - |
| ஏனைய வருமானங்கள் | 346,038 | 396,203 | 396,203 | - | 298,473 | 298,473 | 298,473 | - |
| | 392,016 | 454,898 | 451,990 | 34,530 | 342,021 | 333,567 | 325,810 | 33,622 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 177,878,989 தொகைக்கான நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதியில் 19 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 8,124,993 தொகை 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என. | மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமாக காணப்பட்ட 09 காணிகள் தொடர்பான காணி உறுதிகள் காணப்படாதிருந்ததுடன், அந்த காணிகளுக்குரிய பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணி உறுதிகள் காணப்படாத ஆதனங்களுக்காக முறைப் பிரகாரம் காணி உறுதிகள் தயாரித்து உரிமையை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் என. | காணிகளின் அளவினை இனங் காண்பதற்கும் காணி உறுதிகளை தயாரித்து பெறுமதிகளை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஆடிஅம்பலம, வல்பொலவத்த காணி மற்றும் வெலிஹேன தவடகஹவத்த காணி கைப்பற்றியிருந்த அங்கீகாரமற்ற வதிவோர்களை அகற்றி காணியை சபைக்கு உரித்தாக்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது என. | அங்கீகாரமற்ற வதிவோரை அகற்றி காணியை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 24 திகதிய LGD/09/2019(I) சுற்றறிக்கை படிவம் LG/23/1, LG/23/2, LG/23/3, LG/23/4 மற்றும் LG/23/5 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை படிவங்களின் படி சொத்துக்களை ஆவணப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கையில் அடங்கியுள்ள படிவத்தின் பிரகாரம் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 2022 ஆண்டுக்காக மின் பண்டக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 8,149,344 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்காக விலைகூறல்களை மதிப்பாய்வு செய்யும் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.11.1 படி தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் விலை கூறல் மதிப்பாய்வு அறிக்கை தயாரித்திருக்கவில்லை. | 7.11.1 இன் படி செயற்பட்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன், 1.2.1 இல் குறிக்கோள்கள் நிறைவேறும் முகமாக மதிப்பாய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது என. | வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். |